அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 14 / 2018
தேதி : 25.01.2018

ஏழை, எளிய, நடுத்தர வர்க்கத்தினரின் வளர்ச்சிக்கான பட்ஜெட்டாக மத்திய பட்ஜெட் அமையவேண்டும்.

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத்தலைவர் ரா.சரத்குமார் அறிக்கை

2018 – 19 ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் பிப்ரவரி 1ஆம் தேதி தாக்கல் செய்யப்பட உள்ளது.

பணமதிப்பு இழப்பு நடவடிக்கை, ஜி.எஸ்.டி வரிவிதிப்பு போன்ற பொருளாதார சீர்திருத்தங்கள் மேற்கொண்டபின் ஏற்பட்டிருக்கும் பொருளாதார வளர்ச்சியின் பின்னடைவை சரிசெய்ய வேண்டிய நிலையிலும், 2019ஆம் ஆண்டு நாடாளுமன்ற பொதுத்தேர்தல் நடைபெற உள்ளதால், அடுத்த ஆண்டு முழுமையான பட்ஜெட் தாக்கல் செய்யமுடியாத சூழ்நிலையிலும், இந்த பட்ஜெட் மிகுந்த எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

ஆண்டுக்கு ஒரு கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு, கருப்பு பணத்தை முற்றிலும் ஒழித்து வெளிநாடுகளில் முடங்கியிருக்கும் கருப்பு பணத்தை மீட்போம், விவசாயிகளின் ஆண்டு வருமானத்தை இரட்டிப்பாக்குவோம் என்பன போன்ற வாக்குறுதிகளோடு ஆட்சிக்கு வந்த பாஜக, இவற்றில் எதையும் முழுமையாக நிறைவேற்றாத நிலையில், வரும் பட்ஜெட்டில், அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் விதமான அறிவிப்புகளை வெளியிட வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

2016 - 17 ஆம் ஆண்டு 4.9 சதவிகிதமாக இருந்த விவசாய வளர்ச்சி 2017 - 18ல் 2.1 சதவிகிதம் அளவிற்கு மட்டுமே இருக்கும் என்ற கணிப்பு வருத்தமளிக்கிறது. தேசத்தின் முதுகெலும்பான விவசாயத் தொழிலை மேம்படுத்த வேண்டிய கட்டாயம் மத்திய அரசுக்கு உள்ளது. விவசாய கடன்களுக்காக 2017ல் 10 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கி இருந்தாலும் கூட விவசாயிகள் தலைநகரில் போராடியதும், விவசாயிகளின் தற்கொலைகள் எண்ணிக்கை பெருகி வருவதும் ஆராய்ந்து தீர்வு காணப்பட வேண்டியது ஆகும்.

எனவே, முன்னுரிமை அடிப்படையில் விவசாய வளர்ச்சிக்கும், விவசாயிகளின் மேம்பாட்டிற்கும் வரும் பட்ஜெட்டில் திட்டங்கள் அமைய வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். மேலும்,

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

- 'Smart City' என்ற திட்டம் போன்று 'Smart Village' என்ற கொள்கை வகுக்கப்பட்டு, கிராமப்புற பொருளாதார மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் தர வேண்டும்

- கட்டாயக் கல்வி திட்டத்தின் கீழ் 6 முதல் 14 வரை கட்டாயக்கல்வி என்பதை 18 வயதாக அதிகரிக்க வேண்டும்.

- "தூய்மை இந்தியா திட்டம்" விளம்பரப்படுத்தப்படும் அளவு வெற்றிகரமாக செயல்படுத்தப்படவில்லை. எனவே இத்திட்டத்தை தீவிரப்படுத்தி சுற்றுப்புற சுகாதாரம் மேம்படச் செய்ய வேண்டும்.

- கருப்புப் பணம் என்பது வேறு. கருப்புப் பொருளாதாரம் என்பது வேறு (Black Economy) மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 62 சதவிகிதம், அதாவது 243 லட்சம் கோடி அளவிற்கு கருப்புப் பொருளாதாரம் நிலவுவதாக நிபுணர்களால் கணிக்கப்பட்டுள்ளது. எனவே போர்க்கால அடிப்படையில் இதற்கான தீர்வு காணப்பட வேண்டும். ஊழல் தடுப்புச் சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும்.

- ஜி எஸ் டி கவுன்சில் கூட்டங்களில் ஒவ்வொரு கூட்டத்திலும் முடிவெடுத்து, இதுவரை நூற்றுக்கணக்கான பொருள்களுக்கு வரிவிகிதங்கள் குறைக்கப்பட்டு வருகின்றன. பரீட்சார்த்த முறையில் வரிவிகிதங்களை விதித்து அவ்வப்போது மாற்றிக் கொண்டிருக்காமல் அதிகபட்ச வரி 12 சதவிகிதத்திற்குள் இருக்குமளவு தீர்மானிக்க வேண்டும்.

- பெட்ரோல் / டீசல் விலை அதிகரிப்பு மிகுந்த கவலையளிப்பதாக உள்ளது. 7 மாத காலத்திற்குள் பெட்ரோல் லிட்டருக்கு 7 ரூபாயும், டீசல் 9 ரூபாய்க்கு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளன. பெட்ரோல் / டீசல் விலைகளை ஜிஎஸ்டி வரிவிதிப்பின் கீழ் கொண்டு வந்து அவற்றின் விலைகளைக் குறைத்திட இந்த பட்ஜெட்டில் அறிவிக்க வேண்டும்.

- வெளிநாடுகளில், குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகளில், கொள்கை முடிவுகள் மாற்றப்படும் போது இந்திய இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் பாதிக்கப்படுகின்றன. எனவே, உள்நாட்டிலேயே மென்பொருள் மற்றும் தொலைத்தொடர்பு நிறுவன வேலைவாய்ப்புகளை அதிகரிக்க செய்ய வேண்டும்.

- கடந்த 3 நிதி ஆண்டுகளாக தனிநபர் வருமான வரிவிலக்கு உச்ச வரம்பு 2.5 லட்சம் ரூபாயிலிருந்து மாற்றம் செய்யப்படவில்லை. எனவே இந்த பட்ஜெட்டில் தனிநபர் வருமான வரிவிலக்கு உச்ச வரம்பை 5 லட்சம் ரூபாயாக அதிகரிக்க வேண்டும்.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

- ரயில்வே பட்ஜெட் தனியாக இருந்த வரை ரயில்வே துறை குறித்த திட்டங்களும் வளர்ச்சிப் பணிகளும் விரிவாக அறிவிக்கப்பட்டு, தனிவிவாதம் நடத்தி நிறைவேற்றப்பட்டன. தற்போது பொது பட்ஜெட்டிலேயே ரயில்வே பட்ஜெட்டும் சேர்க்கப்பட்டு, மிகக்குறைந்த அளவே திட்டங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. தென்னக ரயில்வேயின் லாபம் கணிசமாக இருந்தும், தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு முடித்திருக்க வேண்டிய திட்டங்கள், புதிய திட்டங்கள் எவையுமே நிறைவேற்றப்படாமலேயே இருக்கின்றன. எனவே, தமிழக ரயில் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து இந்த பட்ஜெட்டில் தகுந்த நிதி ஒதுக்க வேண்டும். "புல்லட் ரயில்" என்ற ஆடம்பர திட்டத்தை கைவிட்டு, நாடு முழுவதும் தரமான ரயில் போக்குவரத்து, பாதுகாப்பான பயணம் போன்ற வளர்ச்சிப்பணிகளில் கவனம் செலுத்த வேண்டும்.

- நெடுங்காலமாக பேசப்பட்டு வரும் "நதிநீர் இணைப்பு" திட்டத்தை செயல்படுத்த வேண்டும். முதற்கட்டமாக தென்னக நதிகளின் இணைப்பிற்கு முன்னுரிமை தந்து நிதி ஒதுக்க வேண்டும்.

- வங்கிகளில் வாராக் கடன் தொகைகள் பன்மடங்கு அதிகரித்து வருவது பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக அமைந்துவிடும். இந்த சுமை வங்கிகளில் வைப்பு நிதி வைத்திருப்பவர்கள் மீது சுமத்தப்படும் என்ற வதந்திக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். வாராக்கடன்களின் அளவைக் குறைக்க தகுந்த கொள்கை முடிவுகளை மத்திய அரசு அறிவிக்க வேண்டும்.

அடுத்தடுத்து நடைமுறைப்படுத்தப்படும் பொருளாதார சீர்திருத்தங்கள் போதும். இனி வளர்ச்சியிலும் மக்கள் நலத்திட்டங்களிலும் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும். "ஏழை, எளிய நடுத்தர வர்க்கத்தினரே ஒரு நாட்டின் எதிர்காலம்" என்பதை கருத்தில் கொண்டு அவர்களுக்கான வளர்ச்சி திட்டங்களை இந்த பட்ஜெட்டில் அறிவிக்க வேண்டும் என்பதை அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ரா.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை - 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com